பருத்தி உற்பத்தி.

*வினா எண் 728—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு, வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பருத்தி உற்பத்தியில் புதிதாக வளர்ச்சிப் பெற்று வரும் மாவட்டம் எது?

(ஆ) உற்பத்தியான பருத்திகள் அனைத்தும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தால் மட்டுமே விற்பனையாகிறதா அல்லது தனிப்பட்டவர் வணிகமும் நடந்து வருகிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) தென் ஆற்காடு, வட ஆற்காடு மற்றும் தருமபுரி மாவட்டங்கள்.

(ஆ) மேற்கண்ட மாவட்டங்களில் உற்பத்தியாகும் பருத்திகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தனியார் வர்த்தகம் மூலம் விற்பனையாகின்றன.

திரு. ரா. வெங்கிடு என்கிற வெங்கிடுசாமி: தலைவர் அவர்களே, பருத்தி உற்பத்தி கோவை மாவட்டத்திலே கோவை, பல்லடம், அவிநாசி போன்ற தாலுக்காக்களில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மகசூல் குறைந்திருப்பதற்கான அடிப்படைக் காரணம் என்ன? ஏக்கருக்கு 12 பொதி விளையக்கூடிய இடத்தில் இப்போது 2, 3 பொதிகூட விளையவில்லையே, அதற்கு அடிப்படையான காரணம் என்ன? இதைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில், 75,000 ஹெக்டேர் நிலத்தில் பல்வேறு வகையான பருத்திகள், சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. 'வரலட்சுமி' 'சுவின்', எம்.சி.யு.-5, எம்.சியு-7 என்று பல்வேறு வகையான பருத்திகள் அங்கே சாகுபடி செய்யப்படுகின்றன. ஆனால், பல்வேறு இடங்களில் 'புரூடோனியா' என்ற புழுவினால், பருத்தி உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டது. அதற்காக, துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது விளைச்சல் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே பருத்தி விளைச்சலில் தர்மபுரி மாவட்டமும் ஒன்று என்பதை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்பேர்ப்பட்ட மாவட்டத்திலே, பருத்தி அறவை அல்லது நூற்பாலை அமைக்கமுன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.,

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி உற்பத்தியைப் பொறுத்தவரை வேளாண்மைத் துறை. ஆனால் இதற்காக ஆலை அமைப்பது, ஏற்படுத்துவது தனித் துறை.

திரு. மு. அண்ணாமலை : தலைவர் அவர்களே, தரமான பருத்தியை தர்மபுரி மாவட்டத்திலே உற்பத்தி செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு, இதிலே ஏற்பட்ட நோயையும் கட்டுப்படுத்தியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இந்த ஆண்டு அதிகப்படியான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கான அலுவலகங்களிலே வாங்கிய விதைகளிலேகூட சரியான முளை விடவில்லை. இதைப் பரிசீலிப்பதற்கும், இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கும். தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, விதைகளைப் பொறுத்த அளவில், நல்ல விதைகளைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, விதைச் சான்றிதழ் இயக்ககம் ஒன்று துவக்கப்பட்டது இந்த ஆண்டிலிருந்து. ஆகவே, நல்ல தரமான விதைகளை வழங்க முடியும். மேலும், உறுப்பினர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி இந்த விதைப் பொட்டலங்களிலேயே எவ்வளவு 'ஜெர்மினேஷன்' ஆகும், எவ்வளவு முளைக்கும், எவ்வளவு 'பர்சென்டேஜ்' கிடைக்கும் என்ற விவரங்களையெல்லாம் போட்டிருக்கிறார்கள். இதிலே குறைவு இருந்தால், இது போன்ற எண்ணங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால், இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால், வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பால்வள நிறுவனத்தில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்கள்.

*வினா எண் 729—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் கால்நடை மருத்துவர்கள் இந்நிறுவனத்தில் பணியில் அமர்ந்து சில மாதங்களுக்குள் மாற்று துறைகளுக்கு (Departments) மாறுதல் கேட்டுப் போவதன் காரணம் என்ன ?

(ஆ) அவர்களுக்கு இந்த நிறுவனத்தில் பதவி உயர்வு இல்லையா ?

(இ) இந்த நிறுவனத்தில் சேர்ந்து, இந்த நிறுவனத்திலேயே தொடர்ந்து பணியாற்ற அரசு பரிசீலனை ஏதேனும் செய்துள்ளதா ?